சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

என் தாயார் தற்பொழுது குடியிருந்து வரும் வீடு இரண்டு பகுதிகளாக உள்ளதென்றால் 3 பகுதிகளாக உள்ளது. என் தகப்பனார் மற்றும் **A**.**O**.சின்னராஜுக்கும் இடையே நடந்த பாகப்பிரிவினையில், அந்த வீடுகளின் ஒரு பகுதி என் தகப்பனாருக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு வந்த பகுதியை நான் விற்பனை செய்து விட்டேன். தற்பொழுது என்னுடைய சுவாதீனத்தில் இருக்கும் பங்கானது, சின்னராஜுக்கு பாத்தியப்பட்டது என்றால், அதில் நாங்களும் வாங்கியிருக்கிறோம். அவ்வாறு வாங்கியதை காட்டுவதற்கான ஆவணத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். பாகப்பிரிவினையில் சின்னராஜுவிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியை அவருடைய வாரிசுகளிடம் ஒப்படைக்கவில்லை என்றால், அவர்கள் வந்திருந்தால் ஒப்படைத்திருப்பேன். சின்னராஜ் காலமான பிறகு, பலமுறை அவருடைய வாரிசுகள் கேட்டும், அந்த பகுதியை ஒப்படைக்காமல் நானே வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது நானும், என் தாயாரும் கடந்த 24.08.2015 தேதியில் மகேந்திரன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தின் பதிவு நகல் தான் அது பிவாசாஆ.6. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மகேந்திரன் மற்றும் ராமமூர்த்திக்கு 21.08.2015 தேதியில் 1 முதல் 4 வாதிகள் எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தின் பதிவு நகல் தான் அது பிவாசாஆ.7. பிவாசாஆ.6-ன் மூலம் கிரயம் கொடுக்கப்பட்ட சொத்தானது பாகப்பிரிவினையில் என் தகப்பனாருக்கு **A** அட்டவணைச் சொத்தாக கொடுக்கப்பட்டது தான். அதே போல் பிவாசாஆ.7-ன் மூலம் கிரயம் கொடுக்கப்பட்ட சொத்தானது பாகப்பிரிவினையில் சின்னராஜுவிற்கு **B** அட்டவணையில் வந்த சொத்து தான். நான், என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை குறித்தோ, சின்னராஜுவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்தோ, சின்னராஜுவின் வாரிசுகளுக்கு உரிமை மாற்ற ஆவணங்கள் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. என்னுடைய சொத்துக்களையோ, என் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையோ விற்பனை செய்து கொள்ள சொல்லி பிரதிவாதிகளுக்கு நான் எந்த அனுமதியும் கொடுத்ததில்லை. என் தகப்பனாரும்,

**(S/d.)Gunasekaran**

சின்னராஜும் கரிதொட்டாம்பாளையம் மற்றும் தொட்டம்பாளையம் கிராமத்தில் சுமார் 28 1/4 ஏக்கர் பூமியை கிரசர் தொழில் ஆரம்பிப்பதற்காக அடமானம் வைத்தார்கள். அந்த பூமிகள் என் தகப்பனார் மற்றும் சின்னராஜ் குடும்பத்திற்கு மட்டும் சேர்ந்தது தான். அந்த சொத்துக்கள் 1991-ம் ஆண்டு பாகப்பிரிவையில் சம்மந்தப்பட்ட சொத்துக்கள் தான். சின்னராஜ் எங்களுக்கு எழுதிக் கொடுத்த உயில் சாசனத்தில் அந்த சொத்துக்களை கொடுத்திருக்கிறார். அந்த உயிலின் அடிப்படையில், அந்த சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்று தான் விளம்புகை பரிகாரத்தை கேட்டிருக்கிறேன். ரூ.9 லட்சம் மதிப்புடைய சொத்துக்களை ரூ.1000/- என மதிப்பு காட்டி வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தெரியாது. நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காக வழக்கு சொத்தின் மதிப்பை குறைத்து காட்டியிருக்கிறேன் என்றால் சரியல்ல. **A.O**.சின்னராஜ், ரவிராஜ், நடராஜ் மற்றும் நான் ஆகியோர் கிரசரிலிருந்து பவானிசாகர் காந்தி பிரஸ்ஸிற்கு சென்றோம். காந்தி பிரஸில் ரகுபதிராஜ், மூர்த்தி, முத்து என்கிற கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஒருவர் இருந்தார், அவர் பெயர் தெரியவில்லை. அங்கிருந்து நாங்கள் அனைவருமே சத்தியமங்கலத்திலுள்ள பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்றோம். வாசாஆ.1 உயில் சாசனம் எழுதப்பட்ட காலக் கட்டத்தில் **A.O**.சின்னராஜின் உடல்நிலை மற்றும் மனநிலை நன்றாக தான் இருந்தது. **A.O**.சின்னராஜுக்கு உயில் எழுதுவதற்கு முன்பு ஏதாவது பெரிய நோய் இருந்ததா? என்று எனக்கு தெரியாது, அவரும் சொல்ல மாட்டார். எனக்கு தெரிந்து என் சித்தப்பா பெரிய வியாதிகளால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்ததில்லை, இறக்கும் பொழுது தான் அது போல் அனுமதிக்கப்பட்டிருந்தார். என் சித்தப்பாவின் படிப்பறிவும், புரிந்து கொள்ளும் சக்தியும் நன்றாக தான் இருந்தது. என் சித்தப்பா சொல்லிய விபரங்களின் அடிப்படையில் ஆவணமானது எழுதப்பட்டது. அதற்கு பத்திர எழுத்தரும் யோசனைகள் சொன்னார். அப்பொழுது நாங்கள் அனைவரும் அங்கு தான் இருந்தோம். ஒரு மாதிரி ஆவணம் தயாரிக்கப்பட்டு, என் சித்தப்பா படித்து பார்த்த பிறகு தான் சரியான ஆவணம் எழுதப்பட்டது. என் சித்தப்பா மாதிரி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு, மாறுதல் எதுவும் செய்ய வேண்டுமென்று சொன்னாரா? என்று எனக்கு ஞாபகமில்லை. என் அண்ணனும், நானும் அந்த மாதிரி ஆவணத்தை படித்து பார்த்தோம். தற்பொழுது, அந்த மாதிரி ஆவணத்தில் என்ன? விபரம் எழுதப்பட்டிருந்தது என்று சரியாக ஞாபகமில்லை. தாவா உயில் சானத்திற்கு முன்பு

**(S/d.)Gunasekaran**

வேறு எந்த? உயில் சாசனத்தையும் படித்து பார்த்ததில்லை. உயில் சாசனத்தை எப்படி? எழுத வேண்டுமென்றே எனக்கே தெரியாது. உயில் சாசனம் எழுதப்பட்ட தேதியில் என் சித்தப்பா நல்ல உடல்நிலையுடன் தான் இருந்தார். பொதுவாக உரிமை மாற்ற ஆவணங்களில் சொத்து விபரத்தை எழுதுவார்கள் என்றால் சரிதான். வாசாஆ.1-ல் அது போல் சொத்து விபரம் எதுவுமில்லை என்றால் சரிதான். என் சித்தப்பாவும் ஜீவ திசைக்கு பிறகு தான் உயில் வரத்தக்கது என்றும், அதற்கு முன்பு உயிலை ரத்து செய்ய அவருக்கு உரிமையுள்ளது என்றும் வாசகங்கள் எதுவும் வாசாஆ.1-ல் இல்லை. வாசாஆ.1-ல், பாகத்தில் வந்த **B** ஷெட்யூல் சொத்துக்கள் அனைத்தும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிரசரின் பூமியை பற்றி உயிலில் குறிப்பிடவில்லை. ஆனால், கிரசர் யூனிட்டில் பாதி பங்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கிரசர் யூனிட்டிலுள்ள பூமியை பொறுத்தும் தான் விளம்புகை பரிகாரத்தை கேட்டிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் 29.05.1991 தேதிய பாக சாசன பத்திரம் என் தகப்பனார் மற்றும் **A.O**.சின்னராஜ் குடும்பத்தில் ஏற்பட்ட சின்னராஜுக்கு வழங்கப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் தான். அது பிவாசாஆ.8. அதில் **A.O**.சின்னராஜுவின் கையெழுத்து உள்ளது. அந்த கையெழுத்தும், வாசாஆ.1-ல் உள்ள கையெழுத்தும் மாறுபட்டுள்ளது என்றால் அதை என்னால் சொல்ல முடியாது. உயில் சாசனம் எழுதப்பட்ட தேதியிலேயே என்னுடைய சித்தப்பா சின்னராஜுவால் என்னிடமும், என் அண்ணனிடமும் ஒன்றாக தான் கொடுக்கப்பட்டது. வாசாஆ.1 உயிலின் அடிப்படையில், அதில் கண்ட சொத்துக்களின் பட்டாவை என் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு 2015-ம் ஆண்டு தான் அனுமதி கேட்டேன். அதற்கு முன்பு வரை வாசாஆ.1 உயிலை நான் வேறு எங்கும் பயன்படுத்தியதில்லை. **A.O**.சின்னராஜ் காலமான பிறகு, அவருடைய உடலானது ஆலாம்பாளையம் கிராமத்திற்கு தான் எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு அவருடைய மனைவியும், இரண்டு மகள்களும் வந்திருந்தார்கள். என் சித்தப்பாவின் ஈமச் சடங்குகளை அவருடைய மகள்கள் தான் செய்தார்கள் என்றால், நாங்கள் தான் செய்தோம். எங்கள் குல வழக்கப்படி பெண்கள் ஈமச் சடங்குகளை செய்ய அனுமதி உள்ளதா? இல்லையா? என்று எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்தில் எத்தனை நாட்களில் கருப்பு கழித்தல் என்ற நிகழ்ச்சியை நடத்த வேண்டுமென்று எனக்கு தெரியாது. சின்னராஜுவின் வாரிசுகள் சின்னராஜ் காலமானதற்கான அனைத்து நிகழ்ச்சிகளிலுமே கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான். என் தாயார் தாவா

(S/d.)Gunasekaran

சொத்துக்களில் தனக்கு உரிமை இருப்பதாக கூறிக் கொண்டு தகராறு எதுவும் செய்யவில்லை. வாசாஆ.1-ன்படி, சின்னராஜுவின் சொத்துக்கள் அனைத்தும் எனக்கும், என் அண்ணன் ரவிராஜுக்கும் தான் பாத்தியப்பட்டது. ரவிராஜ் காலமான பிறகு, அவருடைய பாதிப் பங்கு என் தாயாருக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் என் சகோதரிக்கு எந்த உரிமையுமில்லை. என் சகோதரி இந்த வழக்கில் தரப்பினரா? என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உரிமையே இல்லாத நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருப்பதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் தாயார், ரவிராஜ் மூலம் அவருக்கு வந்த பாகத்தை பொறுத்து ஆவணம் எதையும் எழுதிக் கொடுத்துள்ளாரா? என்றால் நோட்டரி வழக்கறிஞர் மூலம் எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்த ஆவணத்தை என்னால் வழக்கில் தாக்கல் செய்ய முடியும். வழக்கை சரியாக மதிப்பீடு செய்யாததாலும், சரியான நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தாததாலும் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ.1 உயில் சாசனமானது என்னாலும், என் சகோதரர் மற்றும் அதில் சாட்சி கையெழுத்து போட்ட நபர்களால் மோசடியாக என் சித்தப்பாவின் கையெழுத்து போட்டு எழுதப்பட்டது என்பதாலும், அந்த ஆவணம் நடைமுறைப்படுத்தப்படாததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ.1-ல் உள்ள கையெழுத்து, **A.O**.சின்னராஜுவின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. சின்னராஜுவின் வாரிசுகளுக்கு சேர வேண்டிய சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்பதற்காகவே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(S/d.)Gunasekaran
P.W.1

(S/d.)S.Chandrasekaran,
District Munsif,
Sathyamangalam.